MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41
129

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி உ. குரோதனஹூ வைகாசிமீ பகுதி ரு.

VOL. 2. MAY & JUNE 1925. No. 5.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

காரப்பங்காடு
உபயவேதாந்தவித்வான் ஸ்ரீ சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.

[78-ம் பக்கத் தொடர்ச்சி.]

இப்படியே பட்டர் ஸ்ரீஸூக்தியிலும், "அவித்யாதோ தேவே பரிப்ருடதயாவா விதிதயா" என்கிற விடத்தில் "பரிப்ருடதயாவிதிதயா" என்கிற இது விஜாநத் பதத்துக்கு அர்த்தமாக ஏற்படுகிற படியால், அந்த விஜ்ஞாநம் ஸர்வேசுவரன் பரிப்ருடன் என்கிற ஜ்ஞானமாகிறது. அந்த பரிப்ருடத்வமும், ஸர்வப்ரகாரத்தாலும் உத்கர்ஷத்தைச் சொல்லுகிறபடியால், அதில் அநந்ய ஸாத்யத்வமும் உத்கர்ஷமாகையால், அந்த அநந்ய ஸாத்யத்வ ஜ்ஞானமுள்ளவனுக்கு இதரோபாய ப்ரவ்ருத்தி கூடாமையால், அந்த விஜாநத்பதத்தில் ஏற்படுகிற ஜ்ஞாநமும் இதனுடைய பலிதார்த்தமான ஸ்வரூப விருத்தத்வ ஜ்ஞானமாகவே யிருக்கிறது.

மேலும் ப்ரதமாசார்யையான பிராட்டி ஸர்வசக்தையா யிருக்கச்செய்தேயும் பெருமாளுக்கு அத்யந்த பாரதந்த்ரியரூபமான ஸ்வரூபஜ்ஞாநமுடையவளாகையாலே "நத்வா குர்மி தசக்ரீவபஸ்ம பஸ்மார்ஹ தேஜா" என்கிற சுலோகத்தின்படி, ராவண நிரஸநத்தில்

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.

ப்ரவர்த்தித்தாளில்லை. மேலும், "நசாஸ்ய புத்தி தௌர்பல்யாத் உபாயாந்தர மிஷ்யதே" என்கிற சுலோகத்தில் உபாயாந்தர ஸ்வீகாரத்துக்குக் காரணம் புத்தி தௌர்ப்பல்யமென்று சொல்லப்படுகிறது. இங்க புத்தி தௌர்ப்பல்யமானது புத்தியினுடைய சாஞ்சல்யம்; அதாவது- சேதநஸ்வரூபம் பகவ தத்யந்த பாரதந்த்ரியமென்கிற ஜ்ஞாநம் அப்ராமாண்ய சங்காக்ருஸ்தமாயிருக்கை. இப்படிச் சொல்லாமல், ஒருவன் அசக்தனாயிருந்தபோதிலும், துராசாரவசத்தால் உபாயாந்தரத்தில் அதிகாரமிருப்பதாக ப்ரமித்தானேயானால் அவனுக்கு உபாயாந்தரத்தில் அதிகாரமுண்டு என்று சொல்லும்பக்ஷத்தில், தௌர்பல்ய சப்தம் ப்ரமபரமென்று சொல்லுவது அநுபபந்நமாகையாலும், அசக்தன் துராசையால் உபாயாந்தரத்தில் ப்ரவ்ருத்தித்தால் அசக்தியாலேயே உபாயாந்தரத்தில்நின்றும் நிவ்ருத்தனாய்விடுவதாலும், விதிக்கு ப்ரயோஜநமுமில்லை; அசக்தசப்தாத்யாஹாரதோஷமும் ஏற்படும். விசேஷஜ்ஞர்களான வ்யாஸாதிகளுக்கு ஜ்ஞாநமாந்த்யத்தைச் சொல்லுமதிற்காட்டிலும் அத்யாஹாரதோஷம் ஸஹ்யம் என்று சொல்லில், அதற்கு உத்தரம் கீழே சொல்லப்பட்டது. மேலும் அவர்கள் சாஸ்த்ர ப்ரதாநாதிகளால் ஜ்ஞானமுள்ளவர்களா யிருந்தபோதிலும் உபகாரக ராவார்களேயன்றி உத்தாரகர்களாகார். ஆகையாலேதான் நம்முடைய குரு பரம்பரையிற் சேர்ந்தார்களில்லை. ஆழ்வாராசார்யர்கள்போலே விசேஷித்து கௌரவ்ய ராகவுமில்லை. "தஸ்மை நமோமுநிவராய பராசராய" என்று, ஆளவந்தார் அருளிச்செய்ததும் கேவலோபகாரத்வப்ரயுக்தம்.

அஹிர்ப்புத்ந்யஸம்ஹிதையிலும் "அநைசுவர்யாத் ஸ்வபாவஜாத்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் அநைசுவர்யமென்பது ஈசுவரத்வாபாவம்; அதாவது ஸ்வாதந்த்ரியாபாவ ரூபமான பாரதந்த்ரியம். ஸ்வபாவஜம் என்கையாலே அது ஸ்வரூபப்ரயுக்தமென்று பெறப்படுகிறது. தேசிகனும், "ஸ்ரீரங்கேசுவர யாவதாத்ம நியதத்வத் பாரதந்த்ரியோசித" என்று ப்ரபத்தி யாவதாத்ம நியதமான பாரதந்த்ரியத்துக்கு உசிதை என்று அருளிச்செய்தார். உபாயாந்தராநுஷ்டானயோக்யதையில்லாமையாகிற பாரதந்த்ரியம் அசக்தியாலே யேற்படலாமேயென்னில் அப்போது 'யாவதாத்ம

நியத' என்றருளிச்செய்யவேண்டுவதில்லை. இந்த ச்லோகத்தினுடைய வ்யாக்யானத்தில் அவர் குமாரரான நைனாராசார்யர் "பக்திஸ்து கேவலபாரதந்த்ரியோசிதா, ப்ரபத்திஸ்து குரூபாயாசக்தே: அத்யந்த பாரதந்த்ரியோசிதா" என்று அருளிச்செய்திருக்கிறார்.

குரூபாயாசக்திக்குக் காரணம் கீழ் நிரூபிக்கப்பட்ட அத்யந்த பாரதந்த்ரியஜ்ஞாநமு மாகலாம். தேசிகன், ஸ்வாதிகார விருத்த மென்று பக்தியை அருளிச்செய்திருக்கிறார்; அந்த அதிகாரமும் "அநந்ய சரணத்வாதே ரதிகாரஸ்ய ஸித்தயே" என்கிற ச்லோகத்தின்படி திருமந்த்ரைகதேசமான நம: சப்தத்தின் அர்த்தமாயுள்ள அநந்ய சரணத்வரூபமான உபாய பாரதந்த்ரியம் என்று ஏற்படுகிறது. ஸ்வரூப பரமான திருமந்த்ரத்தில் நம: சப்தார்த்தமாயிருக்கிற அநந்ய சரணத்வமும் ஸ்வரூபமாகையால் அந்த அநந்ய சரணத்வம் ஜ்ஞாயமானமாய்க்கொண்டு ப்ரபத்திக்கு அதிகாரமாகிறது.

அப்படியன்றிக்கே அசக்தியாப்ராப்தமான அநந்யசரணத்வத்வத்தைச் சொல்லுகிறதென்பது அநுபபந்நம். ஆகவே, பக்தி, கீழ்க் குறிக்கப்பட்ட ஸ்வரூபத்துக்கு விருத்தையென்றும், ப்ரபத்தி ஸ்வரூபத்துக்கு அநுரூபை யென்றும் ஏற்படுகிறது. இதைப்பற்றியே, "நார்ஹந்தி சரணஸ்த்தஸ்ய கலாம் கோடிதமீமபி" என்று சரணாகதி நிஷ்டனை உத்கிருஷ்டனாகச் சொல்லியிருக்கிறது.

அப்படியல்லாமல், பக்தி சக்தாதிகாரை; ப்ரபத்தி அசக்தாதிகாரை: என்று சொல்லும்பக்ஷத்தில், ப்ரபத்தி கௌணோபாயமாக ஏற்படுவதால், முக்யமான வாருணஸ்நாநத்தில் அசக்தனாயிருக்கிறவனுக்குக் கௌணமான மந்த்ரஸ்நாநமும் உத்கிருஷ்டமென்று ஏற்படும். மேலும் முக்யோபாயத்தில் அசக்தனாயிருக்குமவன் கௌணோபாயத்தை அநுஷ்டித்தபின்பு சக்தியுண்டாகில் முக்யோபாயத்தை அநுஷ்டித்தால் ப்ரத்யவாயமில்லை யென்பது சாஸ்திரஸித்தமாயிருக்க, கௌணோபாயமான ப்ரபத்தியை அநுஷ்டித்தபின்பு சக்தியுண்டாகி பக்தியை அநுஷ்டிக்கும்பக்ஷத்தில் "நிஷ்ட்டயா ஹீயதே நயா" என்கிற ச்லோகத்தின்படி ப்ரத்யவாயம் ஏற்படுவதாகச் சொல்லுவதும் விருத்தமாம்.

ஆனால் உபாயாந்தராநுஷ்டானத்தில் அசக்தனா யிருக்குமவன் உபாயாந்தரமான பக்தியை அநுஷ்டிக்க எனக்கு சக்தியில்லை நீயே அந்த பக்திஸ்தானத்தில்நின்று எனக்குப் பலத்தைக் கொடுக்க வேணுமென்று குரூபாய பரஸமர்ப்பணத்தைப் பண்ணினபடியால் ஈசுவரன் பக்திஸ்தானத்தில் நின்று பலத்தைக் கொடுக்கிறான்; ஆதலால், இவன் குரூபாய பரஸமர்ப்பணம்பண்ணினபின்பு உபாயாந்தரஸ்தானபத்தியாகிற அதிசயம் ஈசுவரனுக்கு ஏற்படுகிறது, இவனுக்கு சக்தியுண்டாகி பக்தியை அநுஷ்டிக்கும்பக்ஷத்தில் ஈசுவரனுக்கு ஏற்பட்ட உபாயாந்தரஸ்தாநாபத்தியாகிற அதிசயம் போய் விடுகிறபடியால் ஈசுவரனுக்கு அதிசயத்தைப் பண்ணுகையாகிற சேஷத்வரூபமானஸ்வரூபத்துக்கு ஹாநி ஏற்படுகிறபடியால் ப்ரபத்தி யநுஷ்டித்தபிறகு சக்தியுண்டானாலும் பக்தியை அநுஷ்டிக்கக் கடவனல்லன். அப்படி யநுஷ்டித்தானாகில் அவனுக்கு ப்ராய:சித்தம் விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லும்பக்ஷத்தில், பலகரணத்வரூபமான உபாயத்வம் அசேதனத்துக்கேயுள்ளதாகையால் அந்த அசேதன தர்மமான உபாயத்வத்தை ஈசுவரனுக்குச் சொல்லும்பக்ஷத்தில் அபசாரமாம் என்று சொல்லுகிறவர்களுக்கு உபாயாந்தர ஸ்தாநாபத்தியை அதிசயமாக்குவது எங்ஙனே?

ஆனாலும் உபாயாந்தர ஸ்தாநாபத்தி என்பதற்கு அர்த்தம் சேதனன் குரூபாய பரத்தை ஸமர்ப்பித்த பிறகு அந்த குரூபாய பரத்தை அங்கீகரித்து தான் ரக்ஷிக்கிறேன் என்கிற ஸங்கல்பத்துக்கு ஈசுவரன் ஆசிரயமாகவே இது ஈசுவரனுக்கு அதிசயமாகையால் சேதனன் பக்தியை அநுஷ்டித்தால் அந்த ஸங்கல்பத்துக்கு ஹாநி யுண்டாவதால் சேதனனுடைய சேஷத்வரூபமான ஸ்வரூபத்துக்கு ஹாநி ஏற்படும். ஆகையால்தான் பக்தி யனுஷ்டானத்தில் ப்ராய:சித்தவிதி யேற்பட்டிருக்கிறது என்று சொல்லுவதும் உபபந்நமன்று.

குரூபாய பரஸமர்ப்பணம் என்பது குரூபாயத்தை யநுஷ்டிக்க சக்தனல்லேன் என்கிற ஜ்ஞானவிசேஷமன்றி வேறு பரம் தனித்திருப்பதாயும் அந்த பரத்தில் தன்னுடைய ஸ்வத்வம் நிவ்ருத்தமாகி ஈசுவரனுக்கு ஸ்வத்வத்தை யுண்டாக்குகையாகிற ஸமர்ப்பண

மாகாது; தான் அசக்தியாலேயாதல், ஸ்வரூபவிருத்த ஜ்ஞானத்தாலே யாதல் பக்தியநுஷ்டானத்தில் ஏற்படுகிற யோக்யதை யில்லாமையை அறிந்து, அந்த அறிவை முன்னிட்டு தன்னுடைய ரக்ஷணத்தில் தான் அநர்ஹனுயிருப்பதை ஜ்ஞாபித்து, நீயே ரக்ஷகனாக வேணு மென்கிற ப்ரார்த்தனையே குரூபாய பரஸமர்ப்பண மென்னப்படும்,

இந்த குரூபாய பரஸமர்ப்பணமும், இவனுக்கு அதிகாரமாகவே யமைகிறது. அல்லாமல் உபாயமாகும்பக்ஷத்தில் இதுவே ரக்ஷாபர மாகும். அப்பொழுது ரக்ஷாபர ஸமர்ப்பண ஸ்வரூபத்திற்கு ஹாநி ஏற்படும். ஆகையால், தான் அத்யந்த பரதந்த்ரனுன தன்னுடைய ரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாமல் அவனே நிரபேக்ஷரக்ஷகனாக அத்யவ ஸித்து அப்படியே ப்ரார்த்திப்பது ப்ரபத்தியென்று சொல்லவேணும். எப்படியிருந்தாலும் உபாயாந்தர ஸ்தாநாபத்தியாகிற அதிசயத்திற்கு உபாயாந்தராநுஷ்டாநம் பஞ்ஜகமென்று சொன்னுலும், பக்தியநுஷ் டானம் சேஷத்வ ரூபத்துக்கு விருத்தமென்றே ஏற்படுகிறது. அதி காரவிருத்தமென்று சொன்னபோதிலும், அநந்ய சரணத்வ ரூப மான உபாய பாரதந்த்ரியம் ஜ்ஞாயமானமாய்க்கொண்டு அதிகாரமாக ஏற்படுகிறபடியால் அந்த அநந்ய சரணத்வ ரூபமான பாரதந்த்ரிய மும் ஸ்வரூபபரமான திருமந்த்ரத்தில் மத்தியமபதமான நம: சப் தத்துக்கு அர்த்தமாகையால் அந்த அநந்ய சரணத்வமும் ஸ்வரூபமே ஆதலால், ஸ்வஞ்ச தத் ரூபஞ்ச ஸ்வரூபம் என்று ஸ்வாஸாதாரண தர்மமான அநந்ய சரணத்வத்திற்கு உபாயாந்தரம் விருத்தமாகையால் உபாயாந்தரம் ஸ்வரூபவிருத்தமென்னத் தட்டில்லை.

இதை யநுசரித்தே தேசிகனும், "ஆர்த்தேஷ்வா சுபலா" என் கிற சுலோகத்தில் பக்திக்கும் ப்ரபத்திக்கும் வ்யாவ்ருத்தி சொல்லு கிற விடத்தில், "ஸ்ரீரங்கேசுவர யாவதாத்ம நியதத்வத் பாரதந்த்ரியோ சித" என்பதில் "யாவதாத்ம நியத" என்று பாரதந்த்ரியத்தை யரு ளிச்செய்து, அந்த பாரதந்த்ரியத்துக்கு ப்ரபத்தி உசிதையென்றும் பக்தி அநுசிதை யென்றும் அருளிச்செய்திருக்கிறுர். இனி இவற் றின் வக்தவ்ய விசேஷங்கள் பலவாயிருப்பதால் விஸ்தர பயத்தால், நிறுத்திவிட்டேன்.

இனி, பக்தி ஸ்வரூப விருத்தை யென்னுமிடத்தில் அநந்ய சரணத்வ ரூபமான உபாய பாரதந்த்ரியமாகிற ஸ்வாஸாதாரண தர்மத்திற்கு விருத்தையென்று ஏற்படுகிறபடியால் அந்த விரோதமானது இப்படிப்பட்டதென்று நிரூபிக்கப்படுகிறது. "நஸ்த்ரீ ஸ்வாதந்த்ரிய மர்ஹதீ" என்று ஸ்த்ரீக்கு உள்ள பாரதந்த்ரியமானது அவளுக்கு பும்வத்பாவ மேற்பட்டால் அது நிவ்ருத்தமாமாப் போலேயும், அக்நிக்குள்ள தாஹக சக்தியானது மணிமந்த்ரங்களுடைய ஸாந்நித்யத்தில் நிவ்ருத்தமாமாப்போலேயும் உபாயாந்தரப்ரவ்ருத்தியும் நிவ்ருத்தமாம். பாரதந்த்ரியம் ஸ்வரூபாநுபந்தியானாலும் அதனுடைய பலோபாயந சக்தியானது ஸ்வாதந்த்ரிய மேற்படும்பக்ஷத்தில் நிவ்ருத்தை யாகலாம். அன்றிக்கே தான் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயத்திற்கு அநர்ஹன் என்கிற ஜ்ஞானமுண்டானால் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வய ஸூசகமான உபாயாந்தர ப்ரவ்ருத்தி ஸம்பவியாதாகையால் அதைப் பற்றியும் ஸ்வரூபவிருத்தை என்றும் சொல்லலாம். அதன்றி நித்யமான ஆத்ம ஸ்வரூபத்துக்கு விருத்தையென்பது அர்த்தமன்று. ஆனால் பக்தியை உபாயமாக விதிக்கும் சாஸ்த்ரங்களுக்கு ப்ராமாண்யம் எங்ஙனேயென்னில் ஸ்வரூப விருத்தத்வ ஜ்ஞானமில்லாத அதிகாரிகளைக் குறித்து பக்திவிதி ஏற்பட்டபடியால் அவர்கள் விஷயத்தில் ப்ரமாணமாகலாம். "த்ரைகுண்ய விஷயாவேதா:" என்கிற ப்ரமாணத்தின்படி குணாநுகுணமாக புபுக்ஷுக்களுக்கும், முமுக்ஷுக்களுக்கும் உபாயத்தையும், பலத்தையும் விதிக்கிறதாகையாலே ப்ராமாண்ய ஹாநியில்லை.

உபாயாந்தரத்யாகபூர்வகமான ஸித்தோபாய ஸ்வீகாரத்துக்கு ஹேதுவான ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞானவத் விஷயத்தில் ஈசுவரனுக்கு அத்யந்தாபிமதி யிருப்பதாலே அவர்களும் மீண்டு உபாயாந்தரத்தில் ப்ரவர்த்தித்தால் ஈசுவரனுடைய அத்யந்தாபிமதிக்கு நாசமேற்படுவதாலே தாத்ருசாபிமதி கடிதமான ஸ்வரூபநாசமேற்படுவதால் நாசியநாசகரூபமான விரோதம் உபபந்நம்.

இப்படியாக பக்தி ஸ்வரூபவிருத்தையாகையாலே, திருமந்த்ரத்தால் சிக்ஷிதமான ஸ்வரூபத்தை யுடையவனுக்கு அந்த ஸ்வரூபத்

துக்கு அநுரூபமாக ஈசுவரனையே உபாயமாக வரிக்கையே ப்ராப்த மாகும். நாட்டார் ஊர்வசீ ஸாலோக்யத்துக்காக ஸாதநாநுஷ்டானம் பண்ணுகிறகச்செய்தேயும், தானாகவே மேல்விழுந்த ஊர்வசியைப் பார்த்து அர்ஜுநன் வ்ருத்த ப்ரபிதாமஹியென்று நமஸ்கரித்த ஜிதேந்திரியனாயிருக்க பக்தி யநுஷ்டானத்தில் அசக்தனென்று சொல்லுமது அநுபபந்நமாகையால் அவனுடைய ப்ரபத்தி அதிகார மாக ஏற்பட்டது ஸ்வரூப விருத்தத்வ ஜ்ஞானமேயன்றி வேறில்லை. இனி ப்ரபத்தியின் ஸ்வரூபம் நிரூபிக்கப்படும்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவதத்வதிவாகரம்.

[80-ம் பக்கத் தொடர்ச்சி]

சுரு— மறை என்பது வேதம். அது, வடமொழிமறை யென்றும், தென்மொழிமறை யென்றும் இரண்டுபிரிவுடைய தாயிருக்கும். வடமொழிமறை வ்யாஸபகவானால் வெளி யிடப்பட்டதாம். அது ஸம்ஸ்க்ருத பாஷா ரூபமானது தென்மொழிமறை, ஆழ்வாராதிகளால் வெளி யிடப்பட்டதாம். இவை இரண்டும் அநாதியாயிருப் பனவாம். இவற்றுள் வடமொழி மறையானது, பூர்வபாக மென்றும், உத்தரபாகமென்றும் இரண்டுபாகங்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் பூர்வபாகமானது, ஜ்யோதிஷ் டோமாதி யாகங்கள், *பஞ்சமஹா யஜ்ஞயங்கள், ஜாதி

*பஞ்சமஹாயஜ்ஞம்:— ப்ருஹ்மயாகம், தேவயாகம், மானுஷயாகம், பிதுர்யாகம், பூதயாகம் என்பனவாம். அவற்றுள் ப்ருஹ்மயாகமாவது-வேத மோதுதல், தேவயாகமாவது-ஹோமம் வளர்த்தல், மானுஷயாகமாவது-விருந் தோம்பல், பிதுர்யாகமாவது-நீர்க்கடன்செய்தல், பூதயாகமாவது-பலி கொடுத்தல்.

தர்மம், ஜாதிகர்ம்ம் முதலியவற்றைக் குறிப்பிடும். இது கர்மபாக மெனவும் பெயர் பெறும். இதில் சிற்சிலவிடத்தில் ப்ருஹ்ம வஸ்துவாகிய ஸர்வேசுவரனைக் குறித்துப் பேசுவதாயிருந்தாலும் முக்யமாகக் கர்மத்தைப்பற்றியே பேசுகின்றதினல் கர்மபாக மென்று வழங்கலாயிற்று. உத்தரபாகமானது, ப்ருஹ்ம வஸ்துவை நேராகக் கூறுவது; இது, ப்ருஹ்மபாகமெனவும் பெயர்பெறும். தென்மொழிமறை இந்தப் பிரிவின்றி ப்ருஹ்மவஸ்துவைமாத்திரமே குறிப்பிடும். இது ஸர்வேசுவரனது நியமனம்பெற்ற நித்யஸூரிகள் சேதனர்கள் உஜ்ஜீவிக்கும் பொருட்டுத் திராவிடதேசத்தில் கலிமானுஷ கலுஷாபகர்களாய் (கலியில் பாஷண்டர்களால் மோஹிப்பிக்கப்பட்ட மனுஷ்யர்களின் புத்தி மாறுட்டத்தை மாற்றுமவர்களாய்) அவதரித்த நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களைக் குறிப்பிடும். இது வடமொழிமறையைப்போல கர்ம, ப்ருஹ்மங்களைக் கலந்து கூருமல் ப்ருஹ்மமொன்றையே சிறப்பித்துக் கூறுகின்றமையால் பெருமையுடையதெனக்கொள்ளக் குறையில்லை.

இது நிற்க, வடமொழிவேதம் அதிக்ருதாதிகாரம் (பிர்ம்ம, க்ஷத்ரிய, வைசியர் என்ற மூவருமே படிப்பதற்கு அதிகாரமுள்ளது.) மற்றவர்கள் சொல்லிலும், கேட்கிலும் அவர்களை அசுத்தமாக்கித் தானும் அசுத்தமாகும். தமிழ்வேதம் அவ்வாறன்றி ஸர்வாதிகாரமாய்ப் படித்தவர்களையும், கேட்டவர்களையும் பரிசுத்தமாக்கித் தானும் மேன்மையுற்று விளங்கும். இதுவரையும் மறையென்பதும், அதன்வகையும், பாகமும், அதிகாரியாவார்களையுங் கூறினேன். இனி வடமொழி, தென்மொழி மறைகளைக் கற்கவேண்டிய முறைகள் முதலியவற்றைச் சொல்லுகிறேன்.

வடமொழிமறையைக் கற்கவேண்டிய முறையும் கற்றவனுக்கு வேண்டும் ஒழுக்கங்களும்.

சிஷ்யன், வேத வேதாந்தங்களைச் சந்தேகமில்லாமல் கற்றுணர்ந்த ஒரு குருவையடைந்து, ஒரு வருஷகாலம் அவருகந்த பணிவிடைகளைச் செய்து மகிழ்விக்கக்கடவன். பின் அந்தக் குருவானவர், இவன்மீ தருள்கொண்டு வேதத்தை உச்சரிக்கக் கேட்டு இவன் அக்ஷர ஸ்வரபேத முறை பிறழாமல் உச்சரிக்கக்கடவன். இவனுக்கு வேண்டும் ஒழுக்கங்களாவன:- ப்ராதக்கால ஸ்நானம், ஸந்தியா வந்தனம், காயத்திரி ஜபம், உதயோபஸ்தானம் ப்ருஹ்ம சர்ய நியமம், சாந்தம் முதலிய குணங்களை யுடையவனு யிருத்தலாம். வழக்கமாவது:- *"சிகாபுண்ட்ரஞ்ச ஸூத்ரஞ்ச ஸமயாசார மேவச, பூர்வைராச்ரிதம் குர்யாத் அந்யதா பததே பவேத்" என்றும், † "யத்ய தாசரதி ச்ரேஷ்ட: தத்ததேவேதரே ஜநா:—" என்றும், § "ச்ருதி: ஸ்மிருதிர் மமைவாஜ்ஞா யஸ்தா முல்லங்க்ய வர்த்ததே, ஆஜ்ஞாச் சேதி மம த்ரோஹீ மத்பக்தோபி நவைஷ்ணவ:" என்றும் கூறிபபடி பரம்பரையாக முன்னோர்கள் அநுஷ்டித்து வந்தவழி தவறாமல் அநுஷ்டித்து வருகை. கூடா ஒழுக்கமாவது:- விரோதாநுஷ்டானம். அது பலவகைப்படும். அவையாவன:- அதிகாரமில்லாதவரிடத்தில் கேட்கை, அநதிகாரிகட்குச் சொல்லுகை, அநதிகாரிகளின்

---

*(இதன் பொருள்) சிகையும், புண்ட்ரமும், நெற்றில் தரித்துக் கொள்ளப்படும் குறியும், ஸூத்ரமும், சமய ஒழுக்கமும் எவரெவர்களுடைய முன்னோர்களால் எவ்விதம் அநுஷ்டிக்கப்பட்டு வந்தனவோ அவ்விதம் நடவாமல் மாறாக நடந்தானேயாகில் அவன் பதிதனாய்விடுவா னென்பாதம்.

†(இ—ள்) பெரியவனாயுள்ளவன் எதை எதை அநுஷ்டிக்கிறானோ அதை அதை அவன் கீழுள்ள ஜனங்களும் அநுஷ்டிக்கிறார்கள்.

§(இ—ள்) வேதமும், அதன் பொருளை விளக்கிக்கூறுகின்ற தர்ம சாஸ்திரங்களும் என்னுடையகட்டளைகளாம். அவைகளை எவன் அநாதரித்துக் கடக்க நடக்கிறானோ, அவன் என்னுடைய ஆஜ்ஞையைக் கடந்தவனாதலால் எனக்குத் துரோகியாகிறான். அவன், என்னுடைய பக்தனானாலும் வைஷ்ணவனென்று என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டவனாகான் என்பதாம்.

அர்நத்தைப் புஜித்து அத்யயனஞ் செய்கை, அநதிகாரிகள் நிழலில் அத்யயனஞ் செய்கை, அநதிகாரிகள் செவிப்படச் சொல்லுகை, கெட்ட அநுஷ்டான முடையவனாய் அப்யஸிக்கை. தேசகாலங்களை அறியாமல் உச்சரிக்கை, முதலியனவாம்.

தென்மொழிமறைக்குரிய முறைகள்.

எம்பெருமானுடைய அநுக்ரஹம் பெறவேண்டுமென்ற எண்ணமுடைய ஒரு சிஷ்யன், "பயனன்றாகிலும் பாங்கலராயிலும், செயல் நன்றாகத்திருத்திப் பணிகொள்ளும்" பாகவதோத்தமர்களால் 'இவன் நம்முடையவன்' என்று அபிமானிக்கப்பட்டு அவர்களுடைய புருஷகாரத்தால் ஸம்ஸாரமாகிய கடலிற்கிடந்து மயங்குகிறவர்களின் அஜ்ஞானத்தைப்போக்கிப் பரம புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை அடைவிக்கின்ற ஆசார்யனை அடையக்கடவன். அந்த ஆசார்யன், 'இவன் பாகவத புருஷகாரம் பெற்றவன்' எனக்கருதி இவனிடத்திலுள்ள குற்றங்களை ஒன்றும் ஆராயாமல், தன் ஸம்ஸ்கார பலத்தாலும், உபதேச பலத்தாலும் "இரும்பைப் பொன்னாக்குவாரைப் போல" இவனைப் பரிசுத்தனாக்கி, "சாது கோட்டியுட் கொள்ளப் படுவாரே" என்றபடி மெய்யடியார்களின் ஈட்டத்தில் ஒரு கூட்டனாக்கி வைப்பான். அதன் பிறகு இவன் தன் ஆசார்ய நியமனம் பெற்றுக்கொண்டு ஆழ்வார்கள் அருளிச்செயல்களை முறையாக அப்யஸிக்கக்கடவன்.

இந்த அதிகாரிக்கு வேண்டிய ஒழுக்கங்களாவன:— ஆழ்வாராசார்யர்களுடைய திவ்யஸூக்திகளை அநுஸந்திக்கும் பொழுது பக்தியும், திரிகரண (மனம் வாக்குக் காயம்) சுத்தியுடையவனாய் அநுஸந்தித்தல், எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற திவ்யதேசங்களில் அவன் உகந்தருளின கைங்கர்யங்களைச் செய்தல், நான் எனது என்னும் பற்றற்றிருத்தல், ஆசார்யன் செய்த உபகாரத்தை மறவாதிருத்தல், அருளுடையனாயிருத்தல், டம்பம் பொறாமை முதலிய கெட்டகுண மில்லாதிருத்தல்,

ஆசார்யன் முன்னிலையில் தன் அஜ்ஞானத்தை அறிவித்தல், நல்ல குணமும், விரக்தியுமுடையவனோடு சகவாஸஞ் செய்தல், நல்லொழுக்க முடையவர்களைக்கண்டு உகப்புற்றிருத்தல், முதலியனவாம்.

வழக்கமாவது:— ஓராண் வழியாய் உபதேசிக்கப்பட்டு வந்த பூர்வாசார்யர்களின் அநுஷ்டானத்திற்கு மாறுபடாமல் ஒழுகுதலாம்.

கூடா ஒழுக்கங்களாவன:— ஆழ்வார்கள் அருளிச் செயல்களை அநாதரித்தல், பாகவத விஷயத்தில் ஜாதி பற்றி நிந்தித்தல், அர்ச்சாவதார எம்பெருமான் செம்பு, தங்கம் முதலிய உலோகங்களால் ஆக்கப்பட்டவ னென்று கருதுதல், நல்லோர்களைக்கண்டு பொறாமை கொள்ளுதல், கொர்வத்துடன் அருளிச் செயலை உச்சரித்தல், அருளிச் செயலை அநுஸந்திப்பாரிடத்தில் குற்றம் பாராட்டுதல், ஒரு பிரயோஜனங் கருதி அருளிச் செயலை அநுஸந்தித்தல், பகவதம்சபூதர்களாகிய ஆழ்வாராசார்யர்கள் மனுஷ்யர்களோடு ஒப்பாவார்கள் என்று எண்ணுதல், பூர்வாசார்யகளருளிச் செய்த அர்த்த விசேஷங்களை பெரியோர் வாயிலாக அறிந்து கொள்ளாமல் தன் நெஞ்சில் தோற்றியபடி சொல்லிப்பிதற்றுதல், வடமொழி, தென் மொழிமறைகட்கு விபரீதார்த்தங்களைச் செய்து அநதிகாரமுடையதை அதிகாரமுடைய தென்றும், சொல்லத்தகாததை சொல்லத்தக்க தென்றும் பிதற்றுதல் முதலிய இவை.

சும:— தேவரீர் இதுவரையிலும், கருணையோடு கூறியவற்றுள் அடியேனுக்குச் சில சந்தேகக்கள் உண்டாகின்றன. அவை யாவன:- முன் சொல்லப்பட்ட ஆசார்யன் யாவன்? எத்தனை வகையுண்டு? அவன் ஸந்யாஸியாயிருத்தல் வேண்டுமா? க்ருஹஸ்தனாயிருத்தல் வேண்டுமா? அவ்வாசார்யனால் செய்யப்படும் பஞ்ச ஸம்ஸ்காரம் எவை? பஞ்ச ஸம்ஸ்கார வர்ணபேதம்பற்றித் தாரதம்யமாகச் செய்வதுண்டா? சிஷ்யனுடைய உயர்வு தாழ்வைப்பற்றி ஆசார்யனுக்கு உயர்வு தாழ்வு ஏற்படுமா? ஸ்ரீவைஷ்ணவத்வம் பகவத்

ஸம்பந்தமுடைய எல்லோருக்கும் உண்டா? ஒரு வர்ணத்தவருக்கு மாத்திரமே உள்ளதா?

சுகு:— பஞ்சஸம்ஸ்காரஞ்செய்து திருமந்த்ரத்தை உபதேசித்தவன் ஆசார்யனுவான். இந்த ஆசார்ய நியமனமன்றி வேறு ஆசார்யனை யடைந்தவன் திருசங்குவைப்போல சண்டாளனுவான். தன் ஆசார்ய நியமனம்பெற்று இதராசார்யனிடத்தில் விசேஷார்த்தங்களைக் கேட்பது உடையவர் முதலான பூர்வாசார்யர்களின் அநுஷ்டான முறையாகும். ஆசார்ய சிஷ்யர்களுக்கு நாயக நாயகி ஸம்பந்தமுண்டு. ஆகையால் ஆசார்ய நியமனத்தைக் கடந்தவன், பர்த்தாவின் கட்டளையை மீறியவள் பத்னியாகாமல் இழிந்தவளாகிவிடுவதுபோல சிஷ்யனுகாமல் இழிந்தவனுகிவிடுவான்.

(தொடரும்.)

ஸ்ரீ:

கொல்லிப் பாவை.

பெரிய திருமொழியின் இரண்டாம்பத்து ஏழாந் திருமொழியில் கொல்லிப்பாவையின் விஷயம் ப்ரஸ்தாபிக்கப்படுகிறது. அதன் முதற் பாசுரத்தில் "குவளையங்கண்ணி கொல்லியம்பாவை" எனவும், ஏழாம் பாசுரத்தில் "குலங்கெழு கொல்லிக் கோமளவல்லி" எனவும் வருமவ் விரண்டிடங்களும் இங்கே குறிப்பிடத்தக்கன.

(i) 'கொல்லிமலையிலே ஒரு பாவையுண்டு; வகுப்பழகிதாயிருப்பது. எல்லாரும் உருவகுப்புக்குத் தமிழர் சொல்லுவதொன்று. பிறப்பிலே ஒப்புச்சொல்ல வொண்ணுது, ஒன்றிலே எழுதிக்காணில் காணுமித்தனை.'

(ii) 'கொல்லிமலையிலே ஒருபாவையுண்டு; வகுப்பழகிதாயிருப்பது. அதுபோலேயாயிற்று இவளுக்குண்டான ஏற்றமும், பிறப்

பும் அநுகூலரும் அடுத்துப்பார்க்க வொண்ணாத ஸௌகுமார்யமும்.' என்பன முறையே அவ்விரண்டிடத்தும் காணப்படும் வ்யாக்யானக் குறிப்புகளாகும்.

இவற்றால், கொல்லிப்பாவை யென்பது கொல்லி யென்னும் மலையின்மேலே நிர்மிதமாயிருந்த ஒரு ப்ரதிமாவிசேஷ மென்றும், அது மிகவும் அழகாயிருக்குமென்றும், அநுகூலரும் அடுத்துப் பார்க்கவொண்ணாத ஸௌகுமார்யமுடைய தென்றும், தமிழர்கள் அதனை உருவகுப்புக்கு உவமித்துச்சொல்லுவ துண்டென்றும், விளங்குகிறது. இனி இதைப்பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ளும் விருப்பமுடையவர்களுக்கு உபயோகமாகும்படி பழைய தமிழ் நூல்களிற் காணும் விஷயங்களையும் இங்கு ஒருவாறு தொகுத் தெழுதுவோம்.

கொல்லியென்னும் மலை சேரராஜாக்களுக்குரிய தசாங்கங்களில்* ஒன்று. அதற்குக் 'குடவரை' யென்னும் பெயர்வழங்கு

வதால், அது மேற்குத் திக்கிலுள்ள தென்பது அறியத்தகும். சேரராஜ்யமான மலைநாட்டில் 'கொல்லி' என்ற பெயருடைய நகரமொன்று உண்டென்பது, "கொல்லி நகர்க் கோன் குலசேகரன்" என்னும் உபதேசரத்நமாலையாலும் பிறவற்றாலும் நன்கறிந்தது; ஆகையால் அந்நகரத்திற்கு அணித்தான மேற்கு மலைத் தொடர்ச்சியின் ஒரு பகுதியும் அப்பெயரால் முன்பு வழங்கப்பெற்றிருக்கலாமென்பது பொருத்தமுடையதேயாகும். ஆனாலும் இக்காலத்தில் அந்த மலைப்ரதேசம் இன்னதுதானென்று துணிந்து கூற முடியவில்லை†. அவ்வாறாகவே அந்த மலையின்மேல் முன்பு இருந்ததாகச் சொல்லப்படும். கொல்லிப்பாவையை இப்பொழுது நாம் நேரிற்காண இயலாதிருப்பது ஒரு வியப்பாகுமோ? அது நிற்க.

---

*அரசர்க்குரிய தசாங்கங்களாவன:— மலை, நதி, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை. கொடி, முரசு, செங்கோல் என்பன.

†சேலம் ஜில்லாவில் உள்ள மலையொன்றை இக்காலத்துக் கொல்லி யென்னும் பெயரால் வழங்குவர். ஆனாலும் அதுவே கொல்லிப்பாவையின் இருப்பிடமாகச் சொல்லப்பட்ட மலை யென்று கொள்ளுவதற்குத் தகுந்த ஆதாரமில்லை.

அந்த ப்ரதிமை அக்கொல்லிமலையில் தெய்வத்தால் நிருமித்து வைக்கப்பட்டது என்பர். ஜீவகசிந்தாமணியில், "சிலைத் தொழிற் சிறுநுதல் தெய்வப்பாவை போல்" என்னுமிடத்து, ஆசிரியர் நச்சினார்க்கினியர், "தெய்வப்பாவை—தெய்வத்தாற் செய்த கொல்லிப் பாவை; 'பூதம் புணர்த்த புதிதியல் பாவை' என்றார் பிறரும்" என உரை கூறியதனால் அதனை அறியலாம். அன்றியும் அப் பாவை தேவதைகளாலேயே காக்கப்படுவதென்றும், காற்று, மழை, இடி, பூகம்பம் முதலான தீங்குகளால் அதன் உருவமும் தன்மையும் ஒருபொழுதும் கெடுவதில்லையென்றும் நற்றிணையென்னும் சங்கநூலிற் சொல்லப்பட்டிருக்கிறது.

"கொல்லித்
தெய்வங்காக்குந் தீதுதீர்நெடுங்கோட்
டவ்வெள்ளருவிக் குடவரையகத்துக்
கால்பொருதிடிப்பினுங் கதழுறை கடுகினும்
உருமுடன்றெறியினும் ஊறுபல தோன்றினும்
பெருநிலங் கிளரினுந் திருநலவுருவின்
மாயா வியற்கைப் பாவை",

என்னும் அடிகளால் அவ்விஷயம் நன்கு விளங்கும்.

இன்னும் அக்கொல்லிப் பாவை தன் பேரழகினால் அழகிய மகளிர்க்கு உவமை கூறப்படுதலைத் தமிழ்நூல்களிற் பலவிடத்துங் காணலாம்.

"கொல்லிக்
கருங்கட்டெய்வங் குடவரை யெழுதிய
நல்லியற்பாவை யன்னவிம்
மெல்லியற் குறுமகள்".

"கொல்லிக்குடவரைப்
பாவையின் மட வந்தனளே",

என்பன குறுந்தொகை, (89, 100.)

"கொல்லி
யொளிறு நீரடுக்கத்து வியலகம் பொற்பக்
கடவுளெழுதிய பாவையின்
மடவது மாண்ட மாயோளே".

"கொல்லி
நிலை பெறு கடவுளாக்கிய
பலர்புகழ் பாவை யன்ன நின்னலனே".

என்பன அகநானூறு, (62, 209.)

"கொல்லிக்குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை
விரிகதிரிளவெயிற் றோன்றியன்ன நின்
ஆய் நலம்".

என்பது நற்றிணை, (192.)

இவ்வாறே இதற்கு ஆதாரமாகக் காட்டத்தகுவன இன்னும் பலவுள. அவற்றை யெல்லாம் திருவுள்ளம்பற்றியே, "எல்லாரும் உருவகுப்புக்குத் தமிழர் சொல்லுவ தொன்று" என்று பெரிய திருமொழியின் வ்யாக்யானத்தில் குறிக்கப்பட்ட தென்பதும் இங்கே அறியத்தக்கது.

இனி, அப்பாவைதான் அழகிற் சிறந்ததாய் அமைந்திருத்தலை யன்றி, கண்டவர் மனதைக் கவருமியல்புடையதாகவும் சொல்லப் படுகிறது. "பாவையிற் போதலோல்லா ளேன் நெஞ்சத்தானே" என்பது நற்றிணை, (201.) ஜீவக சிந்தாமணியில், "ஒப்பரும் பாவை போன்றுறையும்" "வாக்கமை பாவை பொப்பார்" எனவருமிடங்களின் உரையிலும் இக்கருத்தே விளங்குதல் காணலாம். இவற்றால் அந்த ப்ரதிமை பார்த்தவர் மனதைத் தன்வசமாக்கும் பான்மையுடைய தென்பது பெறப்பட்டது.

இது மட்டுமன்று. இன்னும் அது காமுகரைக் கொல்லும் இயல்புவாய்ந்திருந்த தென்றும், அதனாலேயே அது கொல்லிப் பாவையென்று பெயர்பெற்ற தென்றும் கூறுவர். நம்மாழ்வார் விஷயமாகச் செய்யப்பட்ட மாறனலங்காரமென்னும் அணியிலக்கண நூலில்,

"கூற்றுவன் வேல்போன்று குகன்வேலை வென்றுகொலை
யாற்றலுறும் வன்கணமர் விளைப்பத்—தோற்றமுறும்
கொல்லிப்பாவைக் கிணையாய் நின்றதெவன் கோகனக
வல்லிப்பாவைக் கிணையாவாய்". (202)

என்னும் உதாரணச் செய்யுளின் கீழ், உரையாசிரியர் திருமேனி-இரத்தின கவிராயர், 'கொல்லிப்பாவை-காமுகரைக் கொல்லும் பாவை' என்று குறிப்பெழுதியிருக்கிறார்.

சிலப்பதிகாரமென்னும் மஹா காவ்யத்தில், கதா நாயகனான கோவலன், கண்ணகியென்னும் தன் நாயகியின் நலம் பாராட்டி கூறுமிடத்தில், "அரும் பெறற்பாவாய் ஆருயிர்மருந்தே" என்று சொல்லுவதாகக் காணப்படுகிறது. அங்கு அதன் உரையாசிரியர் அடியார்க்குநல்லார், 'காட்சியின் உயிர்மயக்குறுதலிற் கொல்லியிற் பாவை யென்றும், அவ்வாறு அழியும் உயிரை இமைப்பில் தருதலின் ஆருயிர் மருந்தே யென்றுங் கூறி' யதாக அதன் கருத்தைப் புலப்படுத்தினர்.

இன்னும் அதே காவ்யத்தின் மற்றோரிடத்தில், "செருவெங் கோல மவுணர் நீங்கித், திருவின் செய்யோளாடிய பாவையும்" என வருகின்றது, (கடலாடுகாதை 60, 61) அவ்விடத்திலும் அவ்வுரைகாரர், 'அவுணர் வெவ்விய போர் செய்தற்குச் சமைந்த போர்க் கோலத்தோடு மோகித்து வீழும்படி கொல்லிப்பாவை வடிவாய்ச் செய்யோளாகிய திருமகளால் ஆடப்பட்ட பாவை யென்னும் ஆடலும்' என்று விளங்க வுரைத்துள்ளார்.

இவற்றால் அக் கொல்லிப்பாவை பிறரைக் கொல்லும் ஆற்றலுடைய தென்பது நன்கு துணியப்படுவதோடு, அதனுடைய இத் தகைய ஆற்றலையே பெரிய திருமொழி வ்யாக்யானத்தில், 'அநுகூலரும் அடுத்துப்பார்க்க வொண்ணாத ஸௌகுமார்யமும்' என்று சூசிப்பித்திருப்பதாகவும் எண்ண இடமுண்டாகிறது. அது நிற்க, மேலே 'பாவையென்னும் ஆடல்' என்று குறித்தது, அசுரரைக் கொல்லும் பொருட்டு அமரர்கள் ஆடிய பதினொரு வகைக் கூத்துக்களில் ஒன்றும். அவ்வாடலையே, முன் பொருகாலம் தேவாசுரயுத்தத்தில், தன் அழகின் மிகுதியால் அசுரர்கள் மயங்கி விழும்படி, கொல்லிப்பாவை வடிவாய் நின்று ஸ்ரீதேவி ஆடினள் என்பதாயின் அநாதிஸித்தமாகவே கொல்லிப்பாவை நம் தமிழ் நாட்டில் இருந்துவந்த தென்பது நன்கு வெளிப்படுமன்றோ?

ஆகவே இதுவரையிலும் சொல்லிய விஷயங்களால், கொல்லிப் பாவை தெய்வத்தால் அமைக்கப்பட்ட தென்பதும், அது எக்காலத்தும் அழிவில்லாதிருந்த தென்பதும், கண்டவர் உள்ளம் காமுறச் செய்து இறுதியில் கொல்லும் இயல்பின தென்பதும், அது மிகுந்த பழமையுடைய தென்பதும், பெரிய திருமொழியின் வ்யாக்யானத்தில் பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை ஸாதித்தருளின விஷயங்களைத் தமிழ் ப்ரமாணங்களும் ஆதரிக்கின்றன என்பதும் பிறவும் நன்கு தெளியலாகும்.

T. N. அப்பனையங்கார். மதுரை.

திவ்யப்ரபந்தங்களில் வழங்கும் சரித்திரங்கள்.

(2) வாமனவைபவம்

ஸர்வேசுவரன் நல்லோர்களைக் காப்பாற்றுவதற்காக அவதரித்த அவதாரங்கள் எண்ணிறந்தன. அவற்றுள்,

"இருபதோடிரண்டெனுமவதாரங்கண்முறையே
மருவுமிங்ஙனமாயவன்கலைகளாலின்னும்
கருதுசீரவதாரங்கள்கணக்கிலையெண்ணின்
அரியவாரிதிமணலினுமநேகமென்றறைவார்"

என்றபடி பாகவத புராணத்தில் *இருபத்திரண்டு அவதாரங்கள் சொல்லப்பட்டன. அவற்றுள்ளும் தசாவதாரங்களே சிறந்தன வென்று வழங்கலாகும்.

"மீனமைகோலநெடுநரசிங்கமாகிநிலம்விரகாலளந்தகுறளா
யானதுசீறுமழுவல்வில்லுவெல்லுமுனையலமுற்றசெங்கையவராய்
வானடர்வந்துதொழமண்ணடர்யாவரையுமடிவிக்கவந்தவடிவாய்
நானுவிதங்கொள்பரியாளாகநின்றருளுநாராயணாயநமவே"

என்று வில்லிபுத்தூரரும் உரைத்தார். இந்த தசாவதாரங்களுள் வாமனவதாரம் ஐந்தாவதாக எண்ணப்படும். ஏனைய அவதாரங்களுள் கிருஷ்ணவதாரத்தில் ஸௌலப்யகுணம் (சுலபகுணம்) மிக்கிருக்குந் தன்மைபற்றிப் பன்னிரண்டுமாதம் மோகித்துக்கிடந்த நம்மாழ்வார், வாமனனைக் குறித்துப் பேசவந்தவிடத்தில்,

"சீரால்பிறந்துசிறப்பால்வளராது
பேர்வாமனாகாக்கால்பேராளா—மார்பாரப்
புல்கிநீயுண்டுமிழ்ந்தபூமிநீரேற்பரிதே
சொல்லுநீயாமறியச்சூழ்ந்து"

*இருபத்திரண்டு அவதாரங்களாவன:— ஸனகாதியர், வராகம், நாரதன், நரநாராயணர், கபிலன், தத்தாத்திரையர், மகப்புருஷன், ருஷபன், பிருதுமன்னன், மச்சம், ஆமை, தன்வந்திரி, மோகினி, நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், வியாசன், பலராமன், கண்ணன், புத்தன், கற்கி. என்பனவாம்.

என்றருளிச் செய்தார். இவர் மற்ற அவதாரங்களைத் தனித்தனியே அருளிச்செய்து ஈடுபட்டுச்சென்று இந்த வாமனவதாரத்திற்கு மாத்திரம் பொன்வாணிகன் உரைகல்லில் பல பொன்னை யுரைத்து இதனின் இது சிறிது என்று காட்டுவதுபோல இராம கிருஷ்ணவதாரங்களை ஒருசேர எடுத்துக்காட்டிக் குணச்சிறப்புக் கூறி ஈடுபட்டார். எவ்வாறெனின் ஸ்ரீராமகிருஷ்ணர்கள் தசரத வசுதேவர் செய்த தவங்களே வடிவுற்றெழுந்தனபோல் சிறப்பாக வந்து பிறந்து வளர்ந்தார்களென்பதுபற்றி மனங்களித்திருக்க ப்ராப்தியுண்டு. அவ்வாறு சிராகப்பிறந்து வளராமல் ஒரு, ருஷிபத்னியின் வயிற்றில் வந்து குறளனென்ற பெயரையுந் தரித்துக்கொண்டு உனக்கியலாத யாசகத் தொழிலை மேற்கொண்டு உனக்குச் சொந்தமான பூமியை யாசித்தாய். இவ்வாறுள்ள உன் குணத்தின் எல்லையை நான் எவ்வாறு தேறி ஆறியிருக்கப் போகின்றேன் என்று ஈடுபட்டார் என்பதாம். இவ்வாறு செய்தவை வாமனனுடைய குணம் செயல்களேயாம். இதனால் வாமனனுக்கு ஸௌலப்யகுணம் மிக்குள்ளதென்பது பெறப்படும்.

அது நிற்க, வரையாதுகொடுக்கும் வள்ளல்களில் தலைவனாகிய ஸர்வேசுவரன் தன்னைத் தஞ்சமாக அடைந்தவன்பொருட்டாகத் தன்னை யாசகனாக்கி வந்து இல்லாத பழிச்சொல்லை ஏற்றுக்கொண்டானென்பதே இந்த அவதாரத்திற் குரியமேதார் ஏற்றமாம். உண்மையை ஆராய்ந்துபார்த்தால் ஸர்வேசுவரனுடைய சொத்தாகிய பூமியைத் தன்னதாக அஹங்கரித்துக்கொண்டு தானம் செய்தவனாகிய மஹாபலியைப் பழிகூறவேண்டும். அவ்வாறு கூறுமல் வாமனன், தன் வடிவழகால் வஞ்சித்து, சிறிய காலைக்காட்டி பெரிய காலால் அளந்து மஹாபலியைப் பாதாளத்தில் தள்ளினான். இதென்ன அநீதி என்பர். இது விஷயம்,

> "கொண்டானையல்லால்கொடுத்தாரையார்பழிப்பார்
> மண்தாவெனவிரந்துமாவலியை—ஒண்தாரை
> நீரங்கைதோயநிமிர்ந்திலையேநீள்விசும்பி
> லாரங்கைதோயவடுத்து"

என்று பொய்கையாழ்வார் அருளிச்செய்ததாலும் அறியலாம். இந்தப் பாட்டிற்குப் பெரியவாச்சான்பிள்ளை செய்த வியாக்யானமும்

இங்கு கருதத்தக்கதே. அது வருமாறு:- "குணமே குற்றமாம் குற்றங் குணமாங்கிடீர் ஸம்ஸாரம். ராவணனுபாதி வத்யனாயிருக்க ஔதார்யகுணம் இவன் பக்கலிலே கிடக்கையாலே தன்னதான பூமியை அவனுக்காக மேலெழுத்திட்டு அவன் கொடுத்தானாக இவன் கொண்டதைத் தன் கையிலே நீர் வார்த்தவனைப் பாதாளத்திலே தள்ளினானென்று பழிசொல்லாநிற்பர்கள். தன்னதல்லாத பூமியைத் தன்னதென்று கொடுத்தவனையிறே பழிசொல்ல வடுப்பது" என்பதாம்.

வாமனன், காஸ்யபருக்கு அதிதியின்வயிற்றில் அவதரித்து உடனே ப்ருஹ்மசர்ய வேஷத்தைத் தரித்துக்கொண்டு மஹாபலி யாகசாலையிற் பிரவேஸித்தான். இவனுடைய அழகு *"புலங்கொள் மாணாய் நிலங்கொண்டான்" என்றபடி எல்லா இந்திரியங்களையும் வசீகரிக்கும்படி இருந்தது. இந்நிலைமை கண்ட மஹாபலி இவன் என்ன கேட்டாலும் கொடுத்துவிடுவதாய்த் தீர்மானித்திருந்தான். அப்பொழுது வாமனன் மஹாபலியைப் பார்த்து "கொள்வன் நான் மாவலி மூவடி தாவென்ற கள்வனே" என்றபடி நீ மூவடி மண் தா என்று யாசித்தான். எவரெவர் எதை எதை விரும்பினாலும் அவர் விரும்பியபடியெல்லாங் கொடுக்கும் ஸர்வேசுவரன் பிறரிடஞ்சென்று யாசித்தறியான் என்பதும் பேசும் முறையறியாப் பாலன் என்பதும்,

---

*ஆழ்வார் "புலங்கொள்மாணாய்" என்று வாமனனுடைய அழகைப் பொதுப்பட அருளிச்செய்ததை உட்கொண்டு அதற்கு வ்யாக்யானமாகக் கம்பருரைத்ததும், இங்குக் கருதத்தக்கதே. அது வருமாறு:—

"முப்புரிநூலினன்முஞ்சியன்விஞ்சை
கற்பதோர்நாவனனற்படுகையன்
அற்புதனற்புதரேயறியுந்தன்
சிற்பதமொப்பதொர்மெய்க்கொடுசென்றான்"

என்பதாம். இதன் பொருள் ஆச்சர்ய குணமுடைய வாமனன், நித்யஸூரிகளாலறியப்படும் தன் பரமபதமானது, எப்படி அப்ராக்ருதமாயிருக்குமோ அது போன்ற அப்ராக்ருதவடிவைத்தாங்கி மூன்று புரியையுடைய யஜ்ஞோபவீதத்தையும், (பூநூலையும்) புல்லரைஞாணையும், வேதமோதுகின்ற வாயையும், ஸம்விதாதானம் என்ற அக்னியைப் போற்றும் கையையும் உடையவனாய் மஹாபலியினுடைய யாகசாலையிற் புகுந்தான் என்று.

தோன்ற இக்கு, "கோள்வன் நான் மாவலி மூவடி தா" என்று யாசிக்கு முறைதெரியாது கூறினான். இந்த ஸந்தர்ப்பத்தில், மஹாபலிக்குக் குருவாயும், மந்திரியாயுமிருக்கின்ற சுக்ரன், வாமனனுடைய வடிவழகையும், பேசுகின்ற பேச்சையும் பார்த்து 'இவன் மனுஷ்யனன்று; ஸர்வேசுவரன்; தேவகார்யஞ் செய்ய வந்தான் என்று தீர்மானித்துத் தன் சிஷ்யனாகிய மஹாபலியைப் பார்த்து இதோ உன்னிடத்தில் தானம் வேண்டிநிற்கிற இவன் சாமான்யமான குறளனில்லை. எல்லாவற்றையுமுடைய ஸர்வேசுவரன்; உன்னை ஏமாற்றுவதற்காக இவ்வாறு வேஷத்தைத் தரித்து வந்திருக்கிறான்; ஆகையால் இவன் விரும்பியபடி நீ தானம் செய்துவிடாதே. மேலும் வஞ்சனையுடையவனுக்கும், வேஷதாரிக்கும், 'பொருளுடையவனுக்கும் தானம் செய்வது தக்க தானமாகாது என்று பல நீதிகளை எடுத்துக் கூறினான். இவ்வாறு கூறிய சுக்ரன் உபதேசமொழிகளைக் கேளாமல், வாமனன் விரும்பியபடி தானஞ்செய்ய கெண்டிச்செம்பை யெடுத்துத் தாரை வார்க்கும்பொழுது, சுக்ரன் ஒரு வண்டு ரூபங்கொண்டு கெண்டியின் துவாரத்தை யடைத்தான். அப்பொழுது வாமனன் ஒரு துரும்பை எடுத்து கெண்டியின் துவாரத்தைக் கிளறினான். உடனே சுக்ரனுடைய ஒரு கண் கெட்டது. பின் தான் நீரேற்று மகிழ்ந்தான். இது விஷயம்,

"மிக்கபெரும்புகழ்மாவலிவேள்வியில்
தக்கதிதன்றென்றுதானம்விலக்கிய
சுக்கிரன்கண்ணைத்துரும்பால்கிளறிய
சக்கரக்கையனேயச்சோவச்சோ
சங்கமிடத்தானேயச்சோவச்சோ"

என்று பெரியாழ்வார் அருளிச் செய்தார்.

இவ்வாறு வாமனன் தன் இஷ்டஸித்தி பெற்று உலகை அளவிடத் திரிவிக்ரமாவதாரங்கொண்டு அளக்கப்போகிற சமயத்தில் மஹாபலியின் புதல்வனான நமுசியென்பவன் வந்து தடுத்தான். வாமனன் அவனுக்குத் தக்க சமாதானங்கூறி அவனை வானிற் சுழற்றி விட்டான். இது விஷயத்தைக் குறித்துப் பெரியாழ்வார் அழகுபெற ஒரு பாசுரம் அருளிச் செய்திருக்கிறார். அது வருமாறு:-

"என்னிதுமாயமென்னப்பனறிந்திலன்
முன்னையவண்ணமேகொண்டளவாயென்ன
மன்னுநமுசியைவானில்சுழற்றிய
முன்னுமுடியனேயச்சோவச்சோ
வேங்கடவாணனேயச்சோவச்சோ"

என்பதாம். இந்தப் பாசுரத்தை மேலெழுந்தவாறு ஆராய்ந்தால் திரிவிக்ரமன் திருவடியைப்பிடித்து நமுசியானவன் தடுக்க, திரிவிக்ரமன் நீ தடுப்பதற்குக் காரணம் யாதென, நமுசி நீ செய்வது கிருத்ரிமச் செயலாமென்று சொல்ல திரிவிக்ரமன் உன்பிதா உதகதானஞ் செய்தது பொய்யோ என்று சொல்ல நமுசி உன், வஞ்சனையை அறியாமல் செய்துவிட்டான். வஞ்சனையில்லையென்று சொல்வையாகில் முன் கேட்டபடி சிறு காலைக்கொண்டு அளக்கக் கடவாய் என்று சொல்ல திரிவிக்ரமன் இவனை ஆகாசத்திற் சுழற்றி எறிந்துவிட்டான் என்பது மாத்திரம் விளங்கும். இங்கு நமுசிக்கும் வாமனனுக்கும் நடந்த உத்தர ப்ரத்யுத்தரங்கள் வ்யாக்யானத்திலிருந்து கீழே காட்டப்படுகிறது.

வாமனன் சுக்ரன்செய்த தடையை நீக்கி உலகை அளவிட எத்தனித்தவுடன் சுக்ரன் சிஷ்யனும் மஹாபலியின் மகனுமாகிய நமுசியென்பவன் "இது என்" என்று வளருகிற திருவடிகளைத் தடுத்தான். திரிவிக்ரமன்—என் அடா தடுக்கிறாய்?

நமுசி— நீயாசிப்பது என்ன? மாயாரூபமாக விருக்கிறதே?

திரி— நான் ப்ருஹ்மசர்ய விரதங்குறையாமல் அநுஷ்டித்து, வேதசாஸ்திர பரீக்ஷைசொல்லி உன் பிதாவால் பெற்ற மூவடிமண்ணை அளவிடவேண்டுமன்றோ.

நமு— நான் பக்வனுன என்னையொழிய என்னப்பன் செய்த தானம் எங்ஙனம் செல்லும்? அங்ஙனஞ் செய்ததுதான் முறையோ?

திரி— உன்னப்பன், என் விஷயத்திற் செய்யுந்தானம், உத்தம தானமாகு மென்றெண்ணித் தன் குருவாகிய சுக்ரன் கூறிய உபதேச மொழிகளை யெல்லாம் தடுத்துத் தானஞ் செய்தான். அவ்வாறு செய்தவன் உன்னையுடன் வைத்துக் கொண்டு செய்வனோ? நீ கூறியது நன்றாயில்லை.

நமு— தானத்திற்கு ஏதேனும் ஆக்ஷேபமுண்டானல் அதை மாற்றிக்கொள்ளலா மென்பது தருமசாஸ்திர முறை யன்றோ?

திரி— இது, பின் தொடர்ச்சியுள்ள வ்யவஹாரமாம் என்று கருதியே பார்ன் முன்னமே *ஸத்யோ தசாஹ ந்யாயமாக தானம் ஏற்றுக் கொண்டேன்.

நமு— அப்படியானல் முன் சிறியவனயிருந்த வடிவுடன்கூடி அளக்கக்கடவாய்.

திரி— மேன்மேலும் ஆக்கமுற்று வளருகிற பருவத்தைவுடைய வனன்றோ? எப்பொழுதும் சிறியவனயிருத்தல் எவ்வாறு கூடும்?

நமு— அவ்வாருகில், இவ்வுலகிலுள்ளார்கள் வளருகிற முறையில் வளர்ந்து அளவிடுவாய்.

திரி— வளர்த்தியென்பது, ஒருபடிப்பட்டிராது பலபடிப் பட்டிருப்ப தறியாயோ? என்னுடைய வளர்த்தி இப்படித்தானிருக்கும். அதற்கென் செய்வது?

நமு— நான் இதுவரையுஞ் செய்த ஆக்ஷேபணைக்கெல்லாம் மறுத்துச் சமாதனங் கூறிவிட்டாய். நீ பெரிய வாயாடியாய்க் காணப்படுகிருய். இப்படியிருக்கின்ற உனக்குத் தானஞ்செய்த என்னப்பனைத்தான் நான் வெறுக்க வேண்டும்.

திரி:— நீ என்னை வெறுத்துப் பல ஆக்ஷேபணை செய்ததுபோல் உன்னப்பனிடத்தில் ஒரு ஆக்ஷேபணையும் செய்து விடாதே?

நமு:— செய்வதால் வரும் கேடு யாது?

திரி:— உன்னப்பன் உன் விஷயத்தில் சந்தேகப்படுவான்

நமு:— அஃதென்ன?

---

*ஸத்யோ தசாஹ ந்யாயமாவது:— பத்துநாட்குப்பின் பெறக்கூடிய உரிமையைத் தற்பொழுதே பெறுவது.

திரி:— *"ஆத்மாவை புத்ரநாமாஸி" என்றபடி பிதாவின் சொல்லைக் கடவாமல் நடக்கின்றவனே புத்திரனுவான். அவ்வாறு நடவாம லிருப்பானுகில் அவன் சங்கரஜாதனென (மற்றொரு தகப்பனுக்குப் பிறந்தவனென்று) மதிக்கப்படுவான். நீ இப்பொழுது உன்னப்பன் செய்த தானத்தைத் தடுக்கின்ருயாதலால், அவன் சொற்படி நடந்தவனுகமாட்டாய். இது நிற்க, அவனைத் தூஷித்துப் பேசுகின்ருய், இப்படியானபோது நீ அவன் புத்திரனில்லை என்பதிற் சந்தேகமில்லை. இங்ஙனமிருக்கின்ற நீ உன் தன்மை யறியாமல் என் முன்னிலையில் "என்னப்பன்" என்று உறவு பாராட்டிப் பேசுகின்ருய். உன்னுறவிருந்தவா றென்னே!

நமுசி இதன்மேலும் பேசுவதற்கோர் வ்யவஹார மில்லாததினல், தன் பலத்தைக் காட்டுவதாய்த் தீர்மானித்து வளருகிற திரிவிக்ரமனுடைய திருவடிகளைப் பிடித்து இழுத்தான். அப்பொழுது திரிவிக்ரமன் இவனை வானிற் சுழற்றி எறிந்தான்.

நமுசி யென்பவன் "இதுஎன்" என்றும், "மாயம்" என்றும், "என்னப்ப னறிந்திலன்" என்றும், "முன்னைய வண்ணமே கொண்டளவாய்" என்றும் கூறிய நான்கு ஆக்ஷேபங்களுக்கு வாமனன் தக்க சமாதானங் கூறியதாக வியாக்யாதா இங்கு அழகுபெற அருளிச்செய்தது போற்றத்தக்கதே.

ஸத்பாத்திரத்தில் தானம் வழங்கியவனும், ஸத்யம் சொன்னவனும் புண்ணியத்தையடைந்து அதன் பலமாகிய இன்பத்தை அநுபவிக்கவேண்டிய முறையிருக்க, இங்கு ஸத்பாத்திரத்தில் தானம் வழங்கிய மஹாபலிக்குச் சிறையிருப்பும், 'இது மாயாரூபம் தகுதியன்று' என்று ஸத்யஞ்சொன்ன சுக்ரனுக்குக் கண்ணிழவும் உண்டாகலாமா? என்று சில ஆக்ஷேபணை யுண்டாகும். இதற்குச் சமாதானம் பூர்வாசார்யர்களுடைய வசனத்தா லறியலாம். அது வருமாறு:— "இவ்விடத்திற்குப் பிள்ளையருளிச்செய்தாராக

* இது, தகப்பன் புத்திரனை மடியில் வைத்துக்கொண்டு ஆசீர்வதிக்கும்போது சொல்லும் வேதமந்த்ரம். இதன் பொருள்:- புத்ரனென்னும் பெயரையுடைய நீ என்னுடைய அம்சமாகின்ருய் என்பதாம்.

ஆச்சான்பிள்ளையருளிச்செய்யும்படி அவனுக்கு (மஹாபலிக்கு)த் தோஷம் குரு வசனங்கேளாமை. இவனுக்கு (சுக்ரனுக்கு)த் தோஷம் தானம் விலக்குகை என்று." என்பதாம்.

பகவதவதாரத்திற்குப் பிரயோஜனம் ஸாதுக்கள் ரக்ஷணம், தர்ம பரிபாலன முதலியனவாம். இந்த வாமனாவதாரத்தின் வரலாற்றாலும்; "கள்ளக்குறளாய் மாவலியை" என்றும், "கொடுங்கோளால் நிலங்கொண்ட" என்றும், ஆழ்வாரருளிய பாசுரங்களாலும் வாமனாவதாரத்தின் பிரயோஜனத்தை மேலெழுந்தவாறு ஆராய்ந்து பார்த்தால் வாமனன் க்ருத்ரிமச்செயலையும், அநீதியையும் அநுஷ்டித்துக் காட்டியதாகத் தோற்றும். இதன் உண்மையறியவேண்டுவதும் கடமையாகும்.

இந்த அவதாரத்தின் உண்மையை "மதியினால் குறள்மாணாயுலகிரந்தகள்வர்க்கு" என்ற அடியால் வெளியிட்டிருக்கிறார். இதன் பொருள், ஈட்டில் "மதியினால்" அவர் சாலதூரதர்சிகள்கிடிகோள் ராவணனைப்போலே தலையறுத்துவிடவொண்ணாதபடி ஔதார்யமொன்றொரு குணலேசத்தை யேறிட்டுக்கொண்டிருந்தான். இந்த்ரன் ராஜ்யத்தை இழந்து நின்றான் இரண்டுக்கும் அவிருத்தமாகச் செய்யலாவதென்? என்று "கோஸஹஸ்ரப்ரதாதாரம்" என்கிறபடியே கொடுத்து வளர்ந்த கையைக்கொண்டு நீரேற்று அவனுக்குக் கொடுத்த விரகர்க்கு "குறள்" கோடியைக் காணியாக்கினால் போலே பெரிய வடிவழகைக் கண்ணாலே முகந்தநுபவிக்கலாம்படி சிறுக்கினபடி, "மாணாய்" 'உண்டு' என்று இட்டபோதோடு 'இல்லை' என்று தள்ளிக் கதவடைத்தபோதோடு வாசியற முகமலர்ந்து போம்படி இரப்பிலே தழும்பேறின வடிவையுடையவனானபடி" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் போந்தபொருள்யாதெனின்? ஸர்வேசுவரன் தன்னியல்பை மாற்றி அடாப்பழி யேற்றேனும் தன்னைத் தஞ்சமென்றடைந்தவர்களைக் காப்பாற்றுவானென்பதாம். இது நிற்க,

"மெய்யர்க்கேமெய்யனாகும்விதியிலாவென்னைப்போலப்
பொய்யர்க்கேபொய்யனாகும்புட்கொடியுடையகோமான்"

என்றபடி அன்புடைய மெய்யர்க்கு மெய்யனாகவும், அன்பிலாப் பொய்யர்க்குப் பொய்யனாகவுமிருப்பானென்பதும் விளங்கும்.

கோலவெஞ்சிலை கொண்டுபுறங்கடை
மீதுநின்றுநி ரந்தரமுங்களி
கூருமைந்தரு டன்சபதஞ்சொலி விளையாடிக்

கூனிநெஞ்சினில் வஞ்சம்விளைந்திட
மேனிகன்றிய லைந்திடவங்கவள்
கூனிமிர்ந்திட வுண்டைதுரந்தருள் பெருமாளே.

[குறிப்பு:—குந்தளம்-கூந்தல். பந்தி-கூட்டம். குழை-காது. மருங்கு-இடை. கலை-வஸ்த்ரம். ப்ரபை-ஒளி, ரேகை-வரை. வரைந்து-எழுதி. சந்து-சந்தனம். இங்கிதம்-இனிமை. ஆயம்-தோழியர்கூட்டம். பதி-ஊர். அணிது-சமீபத்திலுள்ளது. இறை-தலைமகன். விர்தாவில்-வீணை. மஞ்சு-மேகம். சரணம்-திருவடி. புடை-பக்கம் நேர்-ஒப்பு. சிலை-வில். புறங்கடை-அரசமாளிகையின் தலைவாசல். நிரந்தரமும்-எப்பொழுதும். சபதம்-பந்தயம். பிரதிக்ஞையுமாம். துரத்தல்-செலுத்தல். 'சிலம்பு செறித்து' என்றபாலது சந்தநோக்கிச் 'சிலம்பு செறிந்து' என வழங்கப்பட்டது மெலித்தல்விகாரம். 'மாலைகுந்தளபந்தி புனைந்து..........மேவுமன்பதி யிங்கணிதென்று' என்பதனால் களவியலின் இரண்டாம்பகுதியாகிய வன்புறையின் றுறைகள் குறிக்கப்பட்டன.]

24. வேதமெ லாமிறந்து பூதமெ லாமொடுங்கி
வேலையெ லாமெழுந்து பிரமாவும்

வேறுள தேவரும்பொய் [1]லோகமெ லாமழிந்து
வீடுறு காலமந்த வடமீதே

சீதள மார்கொழுந்தி னேரிலை யூடமர்ந்து
சாமள பாலனென்றோர் வடிவாகிச்

சிறிய பாணிகொண்டு வாயிதழ் கோலிமென்ற
சேவடி காணவென்று பெறுவேனோ

மாதவ மாமுகுந்த சீதர தேவரங்க
வாமன நாரசிங்க மணிவாழு

மார்பவ ராகமுந்து [2]கூர்மவ ரூபமென்றும்
வாழிபெ றுவிறைஞ்சி மலர்தூவிச்

1. போலவெலாமழிந்து, 2. கூர்மவதாரதுங்க மாயவெனுவிறைஞ்சி.

கோதறு தேவர்கண்டு வாழ்வுற வீதிநின்று
கூனினள் கூனிலுண்டை விடுவோனே

[3]கோமள மானதுங்க ராகவ ராமசந்த்ர
கோசல நாடவெங்கள் பெருமாளே.

[குறிப்பு:—வேலை-கடல், 'தேவரும்போய்' என்றபாலது சந்தநோக்கித் 'தேவரும்பொய்' எனநின்றது குறுக்கல்விகாரம். வடம்-ஆலவிருக்ஷம். பாணி-கை. இறைஞ்சி-வணங்கி. கோமளம்-அழகு.]

25. கோயிலெனவுரையரங்க நீரகமழிசைகுடந்தை
கோவலினிடைகழியன்பி லுறையூர்பேர்

கூடல்விணகர்கணமங்கை காரகம்வடமலைபொன்செய்
கோயில்கணபுரமழுந்தை புலியூர்நா

வாய்வடமதுரைகுளந்தை நீர்மலைகடிநகர்தஞ்சை
மாமணிதொலைவிலிமங்கை நறையூர்கார்

வானம்வெள்ளறைதிருவிந்த ளூர்கடிநகரெனுமிந்த
மாநகர்தொறுமுனைவந்து புகழ்வேனோ

ஆயுதவகைகள்பயின்று நீள்கலையடையவிளங்கி
யாரணமெனவளர்கின்ற திருநாளில்

ஆடியசடையுமெலிந்த மேனியுமருவியதண்டு
மாமுறுகரகமுமன்பு முளனாகிச்

சேயொளிகிளரநடந்து கோசிகன்வருவதுகண்டு
தேறுதலறமனமஞ்சி யெதிரேபோய்த்

தீதறுமுனியைவணங்கு பூபதிதயரதன்முன்செய்
சீரியதவமெனநின்ற பெருமாளே.

[குறிப்பு:-கோயில் என்பது முதல் கடிநகர் என்பது வரையுள்ளவை திவ்ய தேசங்கள். பேர்-திருப்பேர்நகர்; இது சோழநாட்டுள்ளது. கூடல்-மதுரை. விணகர்-நந்திபுரவிண்ணகரம். பொன்செய்கோயில்-செம்பொன்செய்

3. கோமள மானகங்கை வேணிச தாவுகந்து கூறுமிராமமந்த்ர பெருமாளே.

கோயிலென்னுந் திருப்பதி. அழுந்தை-திருவழுந்தூர். புலியூர்-திருப்புலியூர்; மலைநாட்டுள்ளது. குளந்தை-திருக்குளந்தை; பாண்டியநாட்டுள்ளது. தஞ்சை மாமணி-தஞ்சைமாமணிக்கோயில். தொலைவிலிமங்கை-தொலைவில்லிமங்கலம். வெள்ளறை-திருவெள்ளறை. அடையவிளங்கி-முழுதுந்தெரிந்து. ஆரணம்-வேதம். ஆம்-நீர். கரகம்-கமண்டலம். கோசிகன்-விசுவாமித்திரன்.]

26. உரையறியாதே சிலநாள்போயுஞ்
சிறுமகவாயே திரியாமேலங்
குறுகலைதேறு நெடுநாள்போயும் பொருண்மீதே

யுளமதுநாடா வதையேதேடுங்
கவலைவிடாதே தனவானாய்நின்
றுயர்குடிவீடாய் மடவார்போகந் தலையாயும்

பொருளதுபோயே வறியேனாயும்
பிணிபதனாலே மெலிவேனாயும்
பொறியனல்போலே பசியேமூளுந் துயராயும்

புதுநடைகாணா வுடல்கூனாய்வெங்
கிழவனுமாயே யவமேபோமென்
பொழுதுபிரானே பிறவாவாழ்வின் கருள்வாயே

யரசர்பிரானே வரவேகேளுன்
புதல்வனைநீதா வவனாலேயெங்
கனலவியாதே மகமீடேறுந் தவமேயாம்

அதிசயவாழ்வே யுளதாம்வேறும்
பலபுகழ்பேறும் விடுவேனேனுந்
தசடுபடாதே யறிவாயேயென் குணம்யாவும்

தகுதியெனாநீ டுலகீரேழும்
பிறிதருண்மேலோ னுரையாடாவஞ்
சகமறநேரே கொடுபோவான்வந் திடலோடுந்

தரணியின்வீழா நிலைசோராநொந்
துடலதுவேரா முனிதாள்சூடுந்
தயரதன்வாழ்வே ரகுநாதாநம் பெருமாளே.

[குறிப்பு:-உரை-பேச்சு. தேறு-தேறி, உளம்-மனம். நாடா-நாடி. தன வான்-செல்வமுடையவன். மடவார்போகம் தலையாயும்-பெண்களால் அடையும் இன்பத்தை மிக வுடையவனும். என் பொழுது-என் ஆயுட்காலம். பிரான்-தலைவன். வரவு-வருதல். புதல்வன்-புத்திரன். கனல்-அக்கினி. அவியாது-அணையாமல். மகம்-யாகம். ஈடேறும்-குற்றமின்றி நிறைவுறும். அசடுபடுதல்-அறியாமையுடையவனாதல்; குற்றமுடையவனாதலுமாம். உலகீரேழும் பிறிதருண் மேலோன்-விசுவாமித்திரன். உரையாடா-சொல்லி. கொடுபோவான்-கொண்டுபோகும்பொருட்டு. தாரணி-பூமி. வேரா-வேர்த்து. முனிதாள்-விசுவாமித்திரனது பாதங்களை. சூடும்-சிரசிலே தரித்துக்கொண்ட (அதாவது வணங்கிய). உளமது, பொருளது, பிணியது, உடலது என்பவற்றுள் அது பகுதிப்பொருள் விகுதி.

27. பனிமலரெடுக்கிலவந்த மலராதுதொடுக்கிலமுந்து
பழமலர்கழிக்கிலமஞ்ச னமதாடும்

படிபுனல்விடுக்கிலநின்று திருவடிவிளக்கிலதொங்கல்
பழுதறநிரைக்கிலசந்து புகைதீபம்

இனிமையினளிக்கில்விஞ்சு கவரிகளிரட்டிலபண்பி
னிணையவகையெட்டினிரண்டு பணிதானும்

இசையுறநடத்தில்வன்பொ டமுதுகள்படைக்கிலவென்ற
னிருகையுமவத்திலிருந்த பிழைதீராய்

மனமிசைகருத்துவெகுண்ட கவுசிகர்பதத்தைவணங்கி
மகவினொடுசிறுப்பிளைவந்து தமியேனின்

மகமதுமுடிப்பனெதிர்ந்த நிருதரையறுப்பனெழுந்து
வருகெனமறுப்பவெகுண்ட வினைநாடித்

தனிமகனிலக்குவணந்த விருவரையுமொக்கவழங்கு
தாமலமறுத்திடலென்னு பரிவோடே

தவமுனிவசிட்டர்விளம்ப முனியுனதடைக்கலமென்று
தயாதன்விடுக்கநடந்த பெருமாளே.

[குறிப்பு:-பனிமலர்-குளிர்ச்சியுள்ள பூ; (அதாவது வண்டுவிழாததும் வாடாததுமான பூ.) புனல்-நீர். தொங்கல்-மாலை. பழுதற-குற்றம் நீங்க. நிரைத்

தல்-வரிசையாகத் தொங்கவிடல். எட்டினிரண்டுபெணி - சோடசோபசாரம். அவம்-வீண். கவுசிகர்-விசுவாமித்திரர். 'சிறுபிள்ளை' எனற்பாலது சந்தநோக்கிச் 'சிறுப்பிளை'யென விகாரமாயிற்று, நிருதர்-இராக்கதர். தனிமகன்-ஒப்பற்ற புதல்வனன இராமன். வழங்கு-கொடு. தரம்-தகுதி. மேன்மை: பரிவு-அன்பு. தவமுனிவசிட்டர்-தவமுனியாகிய வசிட்டர். முனி-முனிவனே.]

28. அடிபவரோதிருத்துமண்டர் மலரயனேபொருந்துமைந்த
னணையதுவோபெரும்புயங்கர் பெருமானார்

அலர்மகளோபுணர்ந்தமங்கை நிலமகளோவிரும்புநங்கை
யருமறையோவிளம்புசெஞ்சொ லிருதாளின்

விடுபுனலோகறங்குகங்கை யசனமதோபரந்தவண்டம்
வெயின்மதியோவிரண்டுகண்கள் அடன்மாவோ

[1]விநதைகுமாரனின்ப்ரபஞ்ச மகிமையையாவர்கண்டுகொண்டு
வெளியிடுவார்தரங்கரங்க வருள்கூராய்

உடலுயிரேகவெம்பிநின்ற தெனவொருதாதையங்கழுங்க
வொருதவன்வேணுமென்றியம்ப வவனோடே

யுறைநகர்வீதியுங்கடந்து சரயுவையேறிமுந்தியிந்த்ர
னுலவியசோலைதங்கியந்த வழியேபோய்

முடுகியபாணமுந்தெரிந்து வரிசிலைகோலிநம்பிதம்பி
முறைதவிராதுபின்பொருந்தி வரவேநீண்

முடிபுனைகாமன்வெந்தழிந்து பொடிபடுகானகங்களெங்கு
முனிபிறகேநடந்துசென்ற பெருமாளே.

[குறிப்பு:-அண்டர்-தேவர். அணை-படுக்கை. புயங்கர்பெருமான்-ஆதிசேடன். அலர்மகள்-இலக்குமி. கறங்குதல்-ஒலித்தல். அசனம்-உணவு. வெயின்மதி-சூரியசந்திரர். அடன்மா-வலியகுதிரை. விநதைகுமாரன்-கருடன். தரங்கரங்க-அலைகளையுடைய காவிரியாற்றினிடைப்ரதேசத்தை யுடையவனே. அழுங்க-வருந்த, தாதை-தகப்பன்-ஈண்டுத் தசரதன். தவன்-விசுவாமித்திரன். இந்திரன் மருதநிலத்துக்குரியவனதலின் அந்நிலத்துள்ள சோலையை 'இந்திர

1. விதிமறைரூபனின்ப்ரபஞ்ச

னுலவியசோலை' யென்றூர். சிலை-வில், கோலி-வளைத்து. நம்பி-இராமன். தம்பி-இலக்குமணன். முனி-விசுவாமித்திரன்.]

29. ஆசன மெனவடங்கி நீள்குடை யெனவிளங்கி
யாடைய தெனவணங்கி வளர்பாய

லாமென வுடல்விரிந்து பாதுகை யெனவொடுங்கி
யாரிருள் கடியமுந்து சுடராகித்

தேசணி திருவநந்தன் மீளவு மிளவலென்று
தீவன முடனலைந்து தொழுபாதந்

தீமைகள் புரியுமென்ற வீரமில் கொடியநெஞ்சு
சேர்வுறு மெனவிரும்பி லெளிதாமோ

வாசவன் வெருவவண்டர் கோவென யமனெதுங்க
மாதிர கரிகளஞ்ச [1]வெழுகோளு

மாறிட வெகுளிகொண்ட தாடகை வருதல்கண்டு
மாதிவள் சரிதமென்கொ லெனநாடி

ராசத முடன்மகிழ்ந்து கோசிக முனியைமுந்தி
யீரடி தொழுதுநின்று பெரியோனே

ஏழுல கதிரநந்த மேல்வரு கொடியமங்கை
யாரென வினவிநின்ற பெருமாளே

[குறிப்பு:-'ஆசனமெனவடங்கி............தேசணி திருவநந்தன்' என்றது 'சென்றூல் குடையாம்' என்ற முதற்குறிப்புள்ள பாசுரத்தை யுட்கொண்டு கூறியவாறு. பாயல்-படுக்கை. கடிதல்-போக்குதல். சுடர்-விளக்கு. திருவநந்தன்-ஆதிசேடன். இளவம்-தம்பி. தீவனம்-கொடியகாடு. வாசவன்-இந்திரன். அண்டர்-தேவர். கோவென-கோவென்று அலற. கோ-ஈண்டு ஒலிக்குறிப்பு மாதிரகரிகள்-திசையானைகள். எழுகோள்-சூரியன் முதலியன. வெகுளி-கோபம்.]

30. மீனெனவுதித்துமந்த வாமையெனமற்றும்வந்து
மேருவையடக்குபன்றி வடிவாகி

---

1. நவகோளு.

159

மேலொருபிறப்புவெங்க ணாளரியெனப்பிறந்து
    மேதினியளக்கவென்று குறளாகி

யீனமறவெற்றிகொண்ட மூவர்களெனச்சிறந்த
    ராமர்விசயற்குநண்ப னெழின்மாவென்

[1]றேயவதரித்துமுந்து பாகவதருக்குகந்த
    தேமுறவளிக்குமெந்தை யருள்வாயே

தானொருமறத்தியெங்கண் மாதவமழிக்கும்வம்பி
    சாதனையரக்கியென்று பலவாகத்

தாடகைசரித்திரங்கள் யாவையுநிகழ்த்தியுன்ப்ர
    தாபமிதனிற்றெரிந்து விடவேணும்

வானுலகளித்திடென்று நீதியோடெடுத்தியம்ப
    மாதெனநினைந்துநெஞ்சின் மிகநாணி

வார்சிலைகுனிப்பதின்றி யோர்கணைதொடுப்பதின்றி
    மாமுடியசைத்துநின்ற பெருமாளே.

[குறிப்பு:-ஆளரி-நரசிங்கம். குறள்-வாமனன். வெற்றிகொண்ட மூவர்களெனச்சிறந்தராமர்-பரசுராமன், தெசரதராமன், பலராமன் என்பார். விசயற்கு நண்பன்-கண்ணன். மா-கற்கி. ஏமுற-இன்பமுண்டாக. ஏமம் எனற்பாலது ஏம் என நின்றது தொகுத்தல்விகாரம். மறத்தி-வலிமையுடையவள்]

31. மின்னைப் போலே யிடைதுவள வன்னப் போர்வேல் விழிபுரள
    வெண்முத் தேயா கியமுறுவ னிலவீன

வெம்மைக் கோலா கலமுலைகள் கொம்மைக் கோடா மெனமுடுகி
    விம்மிற் றேவா ரொடுகறுவ வருகால்கள்

தன்னத் தான தனதனன வென்னத் தான்வார் குழன்மருவு
    தண்மைப் பூமா லைகள்சரிய விரிதோகை

தன்னைப் போலே மலர்மருவு பொன்னைப் போலே வருமகளிர்
    தம்மைக் காணு மனமெலிவ தொழியாதோ

1. றேபிறவிபத்தொழிந்து வேறிலையுனக்கநந்தம் யானுறுபிறப்பிவிஞ்சு மவர்யாரே'

மன்னுற் றேதா டகைமுடுகு வெம்மைச் சூலா யுதமுறிய
வன்மத் தேவீ சியமர்மு மலையாவும்

மண்ணீற் றூளாய் விழவிரகு பண்ணித் தானே வுகன்மழையும்
வண்ணக் கோலா கலவலியும் நிலைசாயக்

கன்னத் தேகோல் பலசொருகு புண்ணிற் கேநீ டெரிகதுவ
கண்ணிற் கேபேய் நரிகழுகு விளையாடக்

கன்மத் தாலா னவண்மடிய மன்மத் தோர்வா ளிகொடுழுது
கன்னிப் போரா டிய[1]கரிய பெருமாளே.

[குறிப்பு:-முறுவல்-சிரிப்பு. வெம்மை-ஆசை. கோலாகலம் - சம்பிரமம். கொம்மைக்கோடு-அழகிய யானைக்கொம்பு. விம்முற்று-பருத்து. வார்-கச்சு. கறுவ-கோபிக்க. வார்குழல்-நீண்டகூந்தல். தோகை-மயில். மலர்மருவுபொன்-இலக்குமி. மன்னுற்று-அடுத்து. முடுகுதல்-செலுத்தல். விரகு-உபாயம். தான்-என்றது இங்கு தாடகையை. கோலாகலம்-ஆரவாரம். கோல்-அம்பு. மன்மம்-மார்பு. வாளி-அம்பு. கன்னிப்போர்-முதற்போர்.]

32. ஓடுமுருகுந்துயர்கொண்டு வாடுமிளகுந்தனமென்று
லோபமுடனின்றுமயங்கு மிருளாகு

மூடிதெளியுந்தனிகண்ட தேதுமருவும்பலநொந்த
ரூபமுமடைந்திடுமிந்த மனநேரே

கோடுறுகுரங்கெனவிஞ்சு நீடுசெயல்கண்டதும்வஞ்சர்
கோலமிதுதந்திடுபண்பு மமையாதோ

கோயிலுமரங்கமுமுந்த மேவியுனதன்பசைவந்து
கூடியிடவென்றினியன்பு புரிவாயே

மாடுறுசிலம்புதொடர்ந்து கூடிவரவண்டம்நடுங்க
மாநிலமதிர்ந்திடமுந்தி வருவாளை

மாதெனநினைந்ததுவம்பு கோறிபழியன்றெனநின்று
மாமுனிவிளம்பவொரம்பை விடலோடுங்

காடுதிரன்மண்டியலைந்து தாடகைபுலம்பியிருண்ட
காரெனமுழங்கிவிழுந்த பொழுதேமுன்

காதிவருகண்டகர்தங்க ளானவுயிரின்சுவையன்று
காலனறியும்படிகண்ட பெருமாளே.

1. பெரிய.